

# தன்னை அறிந்தவனே தலைவன்!

'தன்னை அறிந்தவனே தலைவன்'என்பது தத்துவம். 'தன்னை அறிந்தால் தனக்கோர் கேடுமில்லை' என்று திருமூலர் கூறுவார். சாக்ரடீஸோ, 'உன்னை நீ அறிவாய்' என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறிச் சென்று விட்டார். சிசரோ என்ற ரோமாபுரி அறிஞரோ, 'ஒவ்வொரு மனிதனும் தன்னைப் பற்றிக் குறைவாகவே அறிந்துள்ளான்' என்றும் 'தன்னைத் தானே முழுமையாக அறிந்து கொள்வது மிக மிகச் சிரமம்' என்று கூறுவார்.

*அக்கினி குஞ்சொன்று கண்டேன் – அதை*<br>
*அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்,*<br>
*வெந்து தணிந்தது காடு – தழல்*<br>
*வீரத்தில் குஞ்சொன்றும் மூப்பென்றும் உண்டோ?*

என்று நம் ஒவ்வொருவருள்ளும் உள்ள அளப்பரிய சக்தியைப் பற்றி அக்கினிக் குஞ்சென்று பாரதி கூறுவான். நம் அறியாமையால் நமக்குள்ளே உள்ள அந்த அற்புத சக்தியை வீணடித்து விடுகின்றோம். அன்றாட வாழ்க்கையில் நமது திறமைகளுக்கும் நாம் எதிர்கொள்ளும் சூழல்களுக்கும் ஏற்படுகின்ற இடைவிடாத போராட்டங்களை நாம் அறிவோம். அதன் விளைவாக நம்மைப் பற்றியும், நமது சக்தியைப் பற்றியும் நாம் புதிது புதிதாகத் தெரிந்து கொள்கிறோம்.

நான் யார்? என்ற கேள்விக்கு ஜாக்கி சான் படம் என்பது பதிலல்ல. உன்னால் முடியும் தம்பி, தம்பி, உனக்குள் இருக்கும் உன்னை நம்பி என்ற சினிமாப் பாடல் வரிகள் அதை சிறிது ஊகிக்க வைக்கின்றன. இங்கு நாம் தெரிந்து கொள்ள வேண்டியது, பதில் தெரிந்தவரெல்லாம் வாழ்வாங்கு வாழ்ந்திருக் கின்றார்கள். சாதனையாளர்களாகத் திகழ்ந்திருக்கின்றார்கள் என்பதுதான்.

*உன்னை அறிந்தால் நீ உன்னை அறிந்தால்*
*உலகத்தில் போராடலாம்*
*உயர்ந்தாலும் தாழ்ந்தாலும்*
*தலை வணங்காமல் நீ வாழலாம்*

என்ற வேட்டைக்காரன் படப் பாடல் வரிகளும் ஒவ்வொரு மனிதனும் தன்னை அறிந்து கொள்ள வேண்டுவதன் முக்கியத்தை வலியுறுத்திக் கூறுகின்றது. இது சம்பந்தமாக மாவீரன் அலெக்ஸாண்டர் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சி எனக்கு நினைவிற்கு வருகின்றது.

ஒரு சமயம் மாவீரன் அலெக்ஸாண்டர் தன் குருநாதர் டயோஜீனஸின் குடிலுக்குச் சென்றார். அவரிடம் 'குருநாதரே, இந்த மக்கள் என்னைக் கண்டு ஒரு பயம் கலந்த மரியாதையைத் தான் வெளிப்படுத்துகிறார்கள். ஆனால் உங்களிடம் அவர்கள் காண்பிப்பதோ ஒரு பாசம் கலந்த மரியாதையை, ஏன் இந்த வித்தியாசம்?' என்று கேட்டார்.அதற்கு குருநாதரோ, 'மன்னா நீ மண்ணை வென்றவன், ஆனால் நான் என்னை வென்றவன்' என்று கூறினார். தன்னை அறிந்தவர்களுக்குக் கிடைக்கும் மரியாதையே தனி என்று இந்த நிகழ்வு நமக்கு உணர்த்துகின்றது.

நண்பர்களே உங்களை நீங்கள் அறிந்துள்ளீர்களா? அதற்கான மூன்று வழிகளைப் பற்றிப் பார்ப்போம்.

**சுய ஆய்வு(Self Analysis):**

வாருங்கள் முதல் வழியான சார்லஸ் ஹட்டன் கூலி என்ற சமூகவியலறிஞர் கேட்கும் மூன்று கேள்விகளின் மூலம் நம்மை அறிய முயற்சிப்போம்.

1. மற்றவர்கள் உங்களைப் பற்றி என்ன எண்ணுகின்றார்கள்?
2. மற்றவர்கள் உங்களைப் பற்றி என்ன எண்ணுவதாக நீங்கள் எண்ணுகின்றீர்கள்?
3. உண்மையில் நீங்கள் யார்?




என்னை ஒரு சிறந்த விளையாட்டு வீரன் என மற்றவர்கள் எண்ணுகின்றார்கள் என்று முதல் கேள்விக்கான விடையாக நீங்கள் கூற முற்பட்டால் கூட அது அநேக நேரங்களில் இரண்டாவது கேள்விக்கான விடையாகக் கூட அமைந்து விடலாம். ஆனால் எந்த ஒரு மனிதனின் 'இமேஜும்' மேலே காணும் மூன்று கேள்விகளுக்குள் கண்டிப்பாக அடங்கி விடும். இந்த மூன்று கேள்விகளுக்கான விடையும் ஒருவருக்கு ஒன்றே என்றால் அவர் தன்னிகரில்லாத் தலைவர் என்பதில் எந்தவிதமான ஐயமுமில்லை.

மகாத்மாவை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். அவருக்கு அஹிம்சையில் நம்பிக்கை இருந்தது. மற்றவர்களும் அவருக்கு அஹிம்சையில் நம்பிக்கையிருந்ததாக எண்ணினர். அவரும் அஹிம்சையில் அவருக்கு நம்பிக்கையிருந்ததாக மற்றவர்கள் எண்ணுவதாக எண்ணினார். ஆக மேற்கூறிய மூன்று கேள்விகளுக்கும் அவரைப் பொறுத்தளவில் ஒரே பதிலாக இருந்ததால் தான் உலகம் போற்றும் உத்தம தலைவராக அவர் விளங்கினார்.

அடுத்த வழியானது மூன்று தளங்களில் நம்மை நாமே கேள்வி கேட்பது தான். ஒவ்வொரு துறை சம்பந்தமான நமது மனநிலை(Attitude), அந்தந்த துறையில் நமது விஷய ஞானம்(Knowledge) மற்றும் அது சம்பந்தமான நமது திறன்(skills) என்று இந்த மூன்று நிலைகளில் நமது இன்றைய செயல்பாடுகள் எங்கனம் உள்ளன? உதாரணமாக ஒரு மாணவனாக படிக்க வேண்டிய அனைத்துப் பாடங்களையும் படித்து மனதில் இருத்திக் கொண்டோமா? தேர்வைத் திறம்பட எழுதக் கூடிய எழுத்துத் திறன் மற்றும் வகுப்பில் பொறுமையாகக் கேட்க உதவும் கேட்கும் திறன் வளர்த்துக் கொண்டோமா? தேர்வு நேரத்தில் டி.வி. வீடியோ. விளையாட்டு என்று அலையாமல் சதா படிப்புச் சிந்தனையாக இருக்கக் கூடிய மனநிலையை வளர்த்துக் கொண்டோமா? என்ற கேள்விகள் நம்மையே நமக்கு அடையாளம் காட்டும்.




மூன்றாவது வழியை இப்பொழுது பார்ப்போம். நாம் ஒரு புதிய பொருளை சந்தைப்படுத்தும் பொழுதும், அல்லது ஒரு புதிய நிறுவனத்தைத் தொடங்கும் பொழுதும் அந்த பொருளைப் பற்றியோ, அந்த நிறுவனத்தைப் பற்றியோ ஒரு சுய ஆய்வு (SWOT ANALYSIS) செய்வோம். அந்த பொருள் மற்றும் நிறுவனத்திற்கான தனிப்பட்ட பலம், பலவீனம், சந்தையில் இருக்கும் வாய்ப்புகள் மற்றும் எதிர்ப்புகள் பற்றிய ஆய்வு தான் அது. அதுபோல நம்மை நாம் சுய பரிசோதனை செய்து கொள்வது நம்மை வெற்றிப்பாதையில் செல்ல வழி வகுக்கும். நாமும் நம்முடைய **பலம், பலவீனம்**, வாழ்வில் நமக்கிருக்கும் **வாய்ப்புகள்** மற்றும் **எதிர்ப்புகள்** போன்றன பற்றி அறிந்து கொள்வோமா?

**எனது பலம்:**

பலம் என்பது ஒரு மனிதனின் திறமை மற்றும் அவனது தனித் தன்மையைக் குறிக்கும். ஒரு மனிதன் தன் பலத்தைப் புடம் போட்டு, பலவீனங்களைக் குறைத்து, வாய்ப்புகளை நன்கு பயன்படுத்தி எதிர்ப்புகளை வெற்றி கொண்டு வாழ்ந்தால் வானம் கூட வசப்படும்.

கீழே காணும் பத்து திறன்களில் உங்கள் பலமாக நீங்கள் கருதுவனவற்றிற்கு நீங்களே மதிப்பெண் அளியுங்கள் (0-5)

| **எனது பலம்** | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|
| 1. நல்ல தொடர்பாற்றல் | | | | | | |
| 2. அனைவருடனும் ஒத்துப் போகும் தன்மை | | | | | | |
| 3. தொலைநோக்குப் பார்வை | | | | | | |
| 4. தன்னம்பிக்கை | | | | | | |
| 5. படைப்பாற்றல் திறமை | | | | | | |
| 6. கடின உழைப்பு | | | | | | |
| 7. வலிந்து செயலாற்றல் | | | | | | |
| 8. விடாமுயற்சி | | | | | | |
| 9. நம்பகத் தன்மை | | | | | | |
| 10. நேர்மை | | | | | | |

மேலே கூறப்பட்டதில் எனது செயல்பாடுகளில் அதிகத் தாக்கம் ஏற்படுத்திய நான்கு முக்கிய திறமைகள்:

1. .................................. 2. .................................... 3. ........................................ 4. ....................................................

**எனது பலவீனங்கள்**

கீழ்க்காண்பனவற்றில் உங்களது பலவீனமாக நீங்கள் கருதுவனவற்றிற்கு நீங்களே மதிப்பெண் அளியுங்கள் (0-5)

| எனது தனித்துவம் | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|
| 1. பாதுகாப்பின்மை | | | | | | |
| 2. வேலைகளைத் தள்ளிப் போடுதல் | | | | | | |
| 3. வேலை நிரந்தரமின்மை | | | | | | |
| 4. எளிதில் பணிந்து போய்விடுதல் | | | | | | |
| 5. எதற்கெடுத்தாலும் குறை கூறுதல் | | | | | | |
| 6. தற்பெருமை பேசுதல் | | | | | | |
| 7. நன்றி மறத்தல் | | | | | | |
| 8. திட்டமிடாத அணுகுமுறை | | | | | | |
| 9. குற்ற உணர்வை வளர்த்துக் கொள்ளல் | | | | | | |
| 10. முன்கோபம் | | | | | | |

எனது வளர்ச்சியைப் பாதிக்கக் கூடிய நான்கு மிக மோசமான பலவீனங்கள்:

1. ................................ 2. ................................ 3. ................................ 4. ................................

என்ன நண்பர்களே உங்கள் பலம் சம்பந்தப்பட்ட மதிப்பெண்கள் பலவீனங்கள் பகுதியில் நீங்கள் பெற்ற மதிப்பெண்களை விடக் கூடுதலாக உள்ளதா? மிக நன்று. அப்படி இல்லையா? கவலை வேண்டாம். இந்தக் கையேட்டின் முக்கிய நோக்கமே உங்கள் திறனை அதிகரிப்பது தான்.

**திறமையின் முக்கியத்துவம்:**

நமது திறமையை நாம் மட்டும் அறிந்தால் போதுமா? அல்லது நம்மைச் சுற்றியுள்ள இந்த சமுதாயமும் அறிய வேண்டுமா?

1. நமது திறமையை நாமும் அறிந்து மற்றவர்களையும் அறியச் செய்தால் நாம் உலகம் போற்றும் தலைவர்களாவோம் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. 'தன்னைத் தானும் அறிந்து கொண்டு ஊருக்கும் சொல்பவர்கள் தலைவர்களாவதில்லையா?' என்ற வேட்டைக்காரன் படப் பாடல் வரிகள் இந்த செய்தியை வலியுறுத்துகின்றது. கண்டக்டராக வாழ்க்கையைத் தொடங்கி பிறகு நடிப்புப் பள்ளியில் படித்து நடிகனாகத் தன் திறமையை வளர்த்து பிறரையும் அறியவைத்து இன்று உச்சத்தில் இருக்கும் நடிகர் ரஜினி காந்த் ஒரு நல்ல உதாரணம்.

2. நம் திறமை நமக்கு மட்டும் தெரிந்து மற்றவர்களுக்குத் தெரியாத ஒரு நிலை ஏற்பட்டால் நமது திறமை குன்றிலிட்ட விளக்கு போல் இல்லாமல், குடத்திலிட்ட விளக்கு போலிருக்கின்றது என்று அர்த்தம். நம் திறமையால் நமக்கும் பயன் இல்லை; இந்த சமுதாயத்திற்கும் பயன் இல்லை. ஜாம்பவானிடம் கேட்டுத் தெரியும் வரை அனுமனின் நிலையும் இது தான்.



3. நமது திறமை நாம் அறியாது மற்றவர்கள் மட்டும் அறியும் நிலை ஏற்பட்டால் நாம் கண்ணிருந்தும் குருடர்களாக உள்ளோம் என்பது மட்டுமல்ல, நமது திறமைகளை மற்றவர்கள் உறிஞ்சி விடக்கூடிய ஒரு நிலைக்கும் ஆளாகிறோம்

4. நம் திறமையை நாமும் அறியவில்லை மற்றவரும் அறியவில்லை என்ற நிலை இருந்தால் நாம் வருத்தப்பட வேண்டும், மேலும் திருந்த வேண்டும் என்பதை பின்வரும் வரிகள் நமக்கு இடித்துக் கூறுகின்றது.

*திருந்தாத உள்ளங்கள் இருந்தென்ன லாபம்*
*வருந்தாத உருவங்கள் பிறந்தென்ன லாபம்*
*இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்*
*இவர் போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்*

ஆக, நமது அடுத்த வேலை நமக்கு நமது திறமை தெரியாவிட்டால் அதைத் தெரிய முயலுவது தான்.



இது சம்பந்தமாக முல்லா நஸ்ருதீன் கதை ஒன்று என் நினைவுக்கு வருகின்றது. ஒரு சமயம் முல்லா தனது ஆட்டைக் காணாமல், போவோர், வருவோரையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது அவரது நண்பர் ஒருவர் அவரைப் பார்த்து பக்கத்திலிருக்கும் கிணற்றில் சென்று பார்க்கச் சொன்னார். அவரும் சென்று பார்த்த பொழுது ஆடு தனது தோளிலேயே இருந்ததை நீரில் தெரிந்த பிம்பம் மூலம் தெரிந்து கொண்டார். ஆட்டைத் தோளில் போட்டுக் கொண்டு அவர் ஊர் முழுவதும் தேடியதைக் கேட்டு கேலியாகத் தோன்றுகின்றதா?

நம்மில் எத்தனை பேர் இப்படி பொருட்களைக் கைகளில் வைத்துக் கொண்டே ஊர் முழுவதும் தேடியிருக்கிறோம்? இப்படித் தேடுவதிலேயே எவ்வளவு நேரம் செலவழித்திருப்போம்? சில சமயங்களில் முல்லாவின் நண்பர் கூறியது போல சீப்பைத் தலையில் வைத்துக் கொண்டே வீடு முழுவதும் தேடிக் கொண்டிருக்கும் நமது அம்மாவிற்கோ, துணைவியாருக்கோ, சகோதரிக்கோ நாம் சுட்டிக் காட்டியிருக்கிறோம். சற்றே அமைதியாக ஓரிடத்தில் அமர்ந்து யோசிக்கும் பொழுது நமக்குத் தேடும் பொருளை எங்கு வைத்தோம் என்று தெரிய வருகின்றது.

இது போல நாமும் நமக்குள்ளிருக்கும் திறமையை உணராது வெளியிலிருந்து உதவிகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் நம்மிடமிருக்கும் திறமையையும் மேலே கூறியது போலக் கண்டறிய முடியும்.

**திறமையை அறிந்து கொள்ள வழிகள் :**

நம் திறமையை பின் வரும் மூன்று வழிகள் மூலம் தெரிந்து கொள்ளலாம்:

1. நமது கடந்தகால வெற்றிகள் மூலமாக
2. நாம் மதிக்கும் பெரியவர்கள் மற்றும் நம்மீது அக்கறையுடைய நண்பர்கள் மூலமாக
3. உளவியல் ஆற்றுப்படுத்துனரின்(psychiatric counsellor) ஆலோசனை களைக் கேட்டு

**நமது கடந்தகால வெற்றிகள் :**



நாம் வாழ்வில் கலந்து கொண்ட பல்வேறு போட்டிகளில் பெற்ற வெற்றிகள் அந்தந்த துறையில் நமது சிறப்பை, நமது திறமையை, நமது பாண்டித்யத்தை வெளிச்சம் போட்டுக் காட்டும். ஒரு நல்ல ஓவியனாக, ஒரு நல்ல பேச்சாளனாக, ஒரு நல்ல கவிஞனாக, ஒரு நல்ல எழுத்தாளனாக, ஒரு நல்ல விளையாட்டு வீரனாக, நண்பர்களின் எண்ணிக்கையை வைத்து அனைவராலும் விரும்பப்படுபவனாக என்று நமது திறமைகளை நமக்கு அவை படம் பிடித்துக் காட்டும்.

**நாம் மதிக்கும் பெரியவர்கள் மற்றும் நம்மீது அக்கறை உள்ள நண்பர்களைக் கேட்டல் :**

ஆனானப்பட்ட அனுமனே கிஷ்கிந்தா ராஜ்ஜியத்தின் மதியூக மந்திரியான ஜாம்பவான் சொல்லித் தான் தனது திறமைகளைப் பற்றி அறிந்து, செயற்கரிய செயல்களையும் செய்தான். ஆகையால் தயக்கம் வேண்டாம் நண்பர்களே, உங்கள் மீது அக்கறை கொண்ட நண்பர்கள், பெரியவர்களை அணுகி உங்களிடம் இருக்கக் கூடிய திறமைகளை அவர்களாகக் கூறாவிடினும் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

**உளவியல் ஆற்றுப்படுத்துனர்கள் (psychiatric counsellor):**

நான் வாழ்வில் வெற்றிகளையே பெற்றதில்லையே, என் மீது அக்கறை உடைய நண்பர்கள், பெரியவர்கள் இல்லையே நான் என்ன செய்வது என்று கலங்க வேண்டாம். தேர்ந்த உளவியல் ஆற்றுப்படுத்துனர்கள் உங்களோடு சிறிது அளவளாவியே உங்கள் திறமைகளை மற்றும் குறைகளை உங்களுக்குச் சுட்டிக் காட்டிடுவர்.


ஆனால் சாதாரண உடற்காய்ச்சலுக்கே டாக்டரைத் தேடி ஓடும் நாம் நமக்கு வரும் மனக் காய்ச்சல்களுக்கு மட்டும் டாக்டரைத் தேடி ஓடாமல் மந்திரவாதிகளையும், பூசாரிகளையும் மட்டுமே தேடி ஓடுவது இந்த நாட்டில்தான் வழக்கமாக உள்ளது. உளவியல் கவுன்சிலர்களைப் பார்க்கலாம் என்று யாரிடமாவது கூறினால் 'நான் பைத்தியமில்லை' என்ற பதில் தான் உங்களுக்குக் கிடைக்கும்.

திருந்தாமல், வருத்தப்படாமல் இருந்தால் வாழவே கூடாது என்று அந்த பாடல் வரிகள் கூறும் பொழுது நம்மை நாம் அறிந்து கொள்ள இந்த வழிமுறையைப் பின்பற்றுவது எந்த வழியிலும் தவறாக ஆகாது. மேலும் திறமையை அறிந்தால் மட்டும் போதாது. வாய்ப்புகளையும் பயன்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும்.

**வாய்ப்புகளைப் பயன்படுத்தல் :**

'உனக்குள் இருப்பதை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது உனக்கு முன்னால் இருப்பதும் பின்னால் இருப்பதும் ஒன்றுமேயில்லை' என்று ஒரு அறிஞர் கூறுவார். 'வாழ்க்கை என்ற வீடு முழுவதும் வாய்ப்புகள் என்ற கதவுகள் உள்ளன, உங்களுக்கு வயதாக வயதாக ஒவ்வொரு கதவாக அடைபட்டு வரும். அனைத்துக் கதவுகளும் அடைபடுவதறகுள் புத்திசாலித்தனமாக அந்த கதவுகளைப் பயன் படுத்தி ஜெயிக்கப் பாருங்கள்' என்று இன்னும் ஒரு அறிஞர் கூறுவார், நம்மில் பலர் வாய்ப்புகளைப் பற்றிய கவனம் கூட இல்லாமலிருக்கின்றார்கள் என்பது நாம் அறிந்த உண்மை தான். நமது முன்னாள் குடியரசுத் தலைவர் திரு.அப்துல் கலாம் அவர்கள் தனது பதவி என்ற பெரிய வாய்ப்பைப் பயன்படுத்தி இந்தியக் குழந்தைகள் அனைவரையும் நாளைய வலிமைமிக்க பாரதத்திற்கான கனவு காண வைத்து விடவில்லையா? தமிழக அரசியலில் நடிகர் ஒருவருக்கு ஒரு மிகப்பெரிய அரசியல் வாய்ப்பு கிடைக்க இருந்ததையும் அதை அவர் தவறவிட்டதையும் நாமனைவரும் அறிவோம்.


ஒரு விவசாயி தான் சாகும் தருவாயில் தனது 5 ஏக்கர் நிலத்தை தனது மகன்கள் 5 பேருக்கும் ஆளுக்கொரு ஏக்கராகப் பிரித்துக் கொடுக்கின்றார். அதைப் பெற்ற கடைசி மகனோ இந்த வானம் பார்த்த பூமியில் எப்படி விவசாயம் பார்ப்பது என்று அதை தன் அண்ணன்மார்களில் ஒருவருக்கு விற்று விட்டு நகரில் வியாபாரம் செய்யப் போய் விட்டான். அங்கு கிணற்றுப் பாசனம் செய்துபார்க்கலாம் என எண்ணி இவன் நிலத்தை வாங்கிய அண்ணன் அதில் ஒரு பெரிய கிணறு வெட்டினான். கிணறு வெட்டும் பொழுது மிகப் பெரிய புதையல் கிட்டியது. அதிலிருந்து அரசாங்கம் கொடுத்த பங்கே நாலு தலைமுறைக்குத் தேறும். கடைசி மகனே இதைச் செய்திருந்தால் அவனுக்கும் பெரிய சொத்து கிடைத்திருக்குமல்லவா?



**வட்டத்தை விட்டு வெளியே வாருங்கள் :**

*வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர் தம்*
*உள்ளத் தனையது உயர்வு* (595)

அதாவது தண்ணீரின் அளவுதான் அதில் மலர்ந்துள்ள தாமரைத் தண்டின் அளவும் இருக்கும். அதுபோல மனிதரின் வாழ்க்கையின் உயர்வு அவர் மனதில் கொண்டுள்ள ஊக்கத்தின் அளவே இருக்கும்.




நீங்கள் பார்க்கும் விஷ வளையம் 'மனம் போல மாங்கல்யம்' என்ற முதுமொழியை உண்மையாக்கும் விஷயம். கணக்குப் பாடத்தில் குறைந்த மதிப்பெண் எடுக்கும் இந்த மாணவனுக்கு அன்று வீட்டுப் பாடமாக 2 கணக்குகள் போட வேண்டியிருந்தது. அவனும் தன் நண்பன் ராமசாமி உதவியோடு போட்டுவிட வேண்டும் என உறுதி எடுக்கிறான். ஆனாலும் அவனால் அது முடியவில்லை. ஏன்? ஏனென்றால் அவன் கணக்கிலே வீக் என்று மனதில் முடிவெடுத்து விட்டான். இதைத் தான் இந்த விஷவளையம் நமக்கு விளக்குகின்றது. நம்மில் அநேகர் இந்த விஷவளையத்தின் ஆதிக்கத்தால் நம் சக்தியை, திறமையை உணராது நம்மைச் சுற்றி ஒரு வட்டமிட்டு அதற்குள்ளேயே திருப்தியாக வாழ ஆரம்பித்து விடுகிறோம். இது சம்பந்தமாக மேலும் ஒரு உதாரணத்தைப் பார்ப்போம்.

காட்டில் இருக்கும் பழக்கப்படுத்தப்பட்ட யானை 10 மனிதர்கள் சேர்ந்து தூக்கக் கூடிய மரத்தைக் கூட எளிதில் தூக்கி விடும். ஆனால் மாலைவேளை அதே யானை காலில் கட்டியுள்ள சிறிய இரும்புச் சங்கிலியால் கட்டுண்டு அமைதி காத்து விடுகின்றது. தன்னால் அந்தச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பித்து விடமுடியும் என்ற நம்பிக்கை அதற்கு இல்லை. நம்மில் பலரும் அதுபோல நம்மைச் சுற்றி ஒரு வட்டத்தைப் போட்டுக் கொண்டு என்னால் இது தான் முடியும் என்று அதைவிட்டு வெளிவர மறுக்கின்றோம். ஆகையால் உங்களைச் சுற்றி நீங்கள் போட்டிருக்கும் வட்டத்தை விட்டு வெளியே வாருங்கள். இதற்குத் தேவை நம்பிக்கையும், தொடர் முயற்சியும் தான்.

**தேவை ஒரு நம்பிக்கை மனோபாவம் :**

பைபிள், உபநிடதம், எமெர்சன், புத்தர் போன்றவர்கள் 'உங்கள் இதய ஆழத்தில் என்ன எண்ணுகின்றீர்களோ அதுபோலவே ஆவீர்கள்' என்று தான் கூறுகின்றார்கள். இந்த உலகம் உங்களை முட்டாள், மண்டு, ஒரு வேலைக்கும் ஆகாதவன் என்று கூறலாம். ஆனால் அதை நீங்கள் உங்கள் இதய ஆழத்திற்கு கொண்டு செல்கின்றீர்களா? என்பதைப் பொறுத்துத் தான் உங்கள் செயல்பாடு அமையும். இந்த இடத்தில் 'உலகம் ஆயிரம் சொல்லட்டுமே, உனக்கு நீ தான் நீதிபதி' என்ற சினிமா பாடலை நினைவில் கொள்ளுங்கள். வெற்றி உங்கள் கைவசமாகும்.



ஒரு சமயம் புத்தரும் அவரது சீடரும் பிச்சை வாங்கிச் சென்று கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்த ஒரு பெண்மணி மட்டும், 'கைகால் நன்றாக இருக்கும் பொழுது இப்படிப் பிச்சை எடுப்பது தவறல்லவா?' என்று அவர்களைத் திட்ட ஆரம்பித்தாள். சீடருக்கோ பயங்கர கோபம். ஆனால் புத்தர் ஒன்றும் கூறாமல் சென்று கொண்டிருந்ததால் அந்தப் பெண்ணிற்கு பதிலளிக்காமல் வருகிறோமே என்று குருநாதரை வினவினார். புத்தர் பதில் ஏதும் கூறவில்லை. தனது கையிலிருந்த கமண்டலத்தை தன் சீடரிடம் கொடுத்து சிறிது நேரம் வைத்திருக்கச் சொன்னார். சிறிது தூரம் சென்ற பொழுது ஓர் ஆறு குறுக்கிட்டது. புத்தர் தன் கமண்டலத்தைத் திரும்பக் கேட்டபொழுது சீடரும் தயங்காமல் அதைத் திரும்பக் கொடுத்தார். இன்னும் சிறிது தூரம் சென்றவுடன் புத்தர் சீடரிடம் கமண்டலத்தைக் கொடுத்து அவரையே சொந்தமாக வைத்துக் கொள்ளச் சொல்லி விட்டார். மறுபடியும் ஓர் ஆறு குறுக்கே வந்தது. இப்பொழுது புத்தர் மறுபடியும் கமண்டலத்தைக் கேட்ட பொழுது சீடர் தயங்கினார். அதற்கு புத்தரோ முதலில் கேட்ட பொழுது தயங்காமல் கொடுத்தாயே இப்பொழுது ஏன் தயங்குகிறாய் என்று வினவினார். சீடரும் முதலில் கமண்டலத்தை தற்காலிகமாக வைத்திருக்கத் தான் கூறினீர்கள் ஆனால் அதற்கப்புறமோ என்னையே வைத்துக் கொள்ளச் சொல்லி விட்டீர்கள் என்று கூறினார். புத்தரும் சீடரிடம் அந்தப் பெண் கூறியதை நீ உனக்கே உனக்கு என்று எடுத்துக் கொண்டதால் தான் உனக்குக் கோபம் வந்தது. ஆனால் நானோ அப்படி எடுத்துக் கொள்ளவில்லை. அதனால் எனக்குக் கோபமும் வரவில்லை.

நீங்களும், அதுபோன்ற கண்ணோட்டத்தை வைத்துக் கொள்வது நல்லது. 'உலகம் ஆயிரம் சொல்லட்டுமே, உனக்கு நீ தான் நீதிபதி' என்ற பாடல் வரிகளை மறுபடியும் மனதிற்குள் சொல்லிப் பாருங்கள்.

கீழ்க் காணும் சொற்றொடரை மூன்று முறை உணர்வுப்பூர்வமாக, ஆணித்தரமாக உரக்கச் சொல்லுங்கள்.

**எனக்குத் தெரியும் I Know**
**என்னால் முடியும் I Can**
**நான் செய்வேன் I Will**

உங்களால் எதையும் சாதிக்க முடியும் நண்பர்களே, 'மனத் திட்பம் இருந்தால் மாமலையும் கடுகே' என்பது முதுமொழி. அந்த நம்பிக்கையோடு மேலே உங்கள் வாசிப்பைத் தொடருங்கள்.

நம்பிக்கை என்றவுடன் ஒரு கதை ஞாபகத்திற்கு வருகின்றது. ஒருமுறை மலையேறும் பொழுது அந்த மலையேறுபவன் மாலை மங்கியபிறகும் கூடாரம் அடித்துத் தங்காமல் தொடர்ந்து அந்த பனிமலை மீது ஏறுகின்றான். ஒரு கட்டத்தில் வெளிச்சம் முழுவதுமாக மங்கி அவனுக்கு பாதையே தெரியவில்லை. அந்த நேரத்தில் வழுக்கி விழ ஆரம்பிக்கின்றான். அந்த கெட்ட நேரத்திலும் ஒரு நல்ல நேரம் என்னவென்றால் அவன் இடுப்பைச் சுற்றிய கயிறு மலை உச்சியில் எங்கோ மாட்டிக்கொண்டு இவன் அதள பாதாளத்தில் விழுந்து விடாமல் இவனைத் தொங்க வைக்கின்றது. தப்பிக்க வேறு வழி எதுவும் புலப்படாததால், அவன் ஆண்டவனிடம் பேசுவதாக நினைத்து பின் வருமாறு கூறுகின்றான். ஆண்டவனே, 'நான் உங்களை மிகவும் நம்புபவன், என்னைக் காத்தருளுங்களேன்' என்று மன்றாடுகின்றான். அப்பொழுது வானத்திலிருந்து ஒரு அசீரிரி கேட்கின்றது. 'என் மீது உண்மையான நம்பிக்கையிருந்தால் உன் கயிறை அறுத்து விடு நான் காப்பாற்றுகின்றேன்' என்ற வார்த்தைகள்தான் அவை. ஆனால் அந்த வீரனோ தன் கயிற்றை விடாது பிடித்துத் தொங்குகின்றான். அடுத்த நாள் அவனைத் தேடி வந்தவர்கள் தரைக்குப் பத்தடி உயரத்தில் கயிற்றில் தொங்கிக் கொண்டு குளிரில் விறைத்த உடலைப் பார்க்கின்றார்கள். முதலில் நம்பிக்கை வைத்து விட்டு பின்னர் உங்கள் நம்பிக்கையை நீங்களே நம்பாவிட்டால் மலையேறும் வீரனுக்கு நடந்தது போல் தானே உங்களுக்கும் நடக்கும்.



நம்பிக்கை என்றவுடன் இன்னுமொரு நிகழ்ச்சி ஞாபகத்திற்கு வருகின்றது. சில ஆண்டுகளுக்கு முன் ஒரு நகரத்தில் ஒரு தடவை மழை வேண்டி பிரார்த்தனை நடந்தது. ஊரே பிரார்த்தனையை வேடிக்கை பார்க்கத் திரண்டிருந்தது. ஆனால் ஒரு சிறுவனை மட்டும் அனைவரும் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். குடையுடன் வந்த அவன் மழையில் நனையாது வீடு திரும்புவதற்காகக் குடை கொண்டு வந்தேன் என்றான். என்னே நம்பிக்கை!

ஆக நம்பிக்கை சாதாரண மனிதனை அசாதாரண மனிதனாக ஆக்குகின்றது. நம்பிக்கை நம்மீதே இல்லாவிட்டால் நாம் சாதனையாளராக மாறுவது சிரமம் என்று ஏற்கனவே நாம் பார்த்த விஷவளையமும் நமக்கு தெளிவாக விளக்குகின்றது. அடுத்ததாகத் தொடர்முயற்சியைப்பற்றிப் பார்ப்போம்.

ஒரு கழுதையானது அதன் வீட்டிலருகில் இருந்த பாழடைந்த கிணற்றிற்குள் விழுந்து விட்டது. கழுதைக்குச் சொந்தக்காரனோ அதைக் காப்பாற்ற

முயலுகின்றான். ஆனால் அந்தக் கிணற்றிற்குள் இறங்கிச் செல்ல படியேதும் இல்லை. அவன் நண்பர்களோ அந்தக் கழுதையைக் காப்பாற்ற இயலாது என்றும் மேலும் வேறு யாரும் அந்தக் கிணற்றிற்குள் விழுந்து விடாபடி அதைக் குப்பை, செத்தை கொண்டு மூடிவிடவும் ஆலோசனை சொல்கின்றார்கள். அவனும் கனத்த இதயத்துடன் நண்பர்களுடன் சேர்ந்து கிணற்றை மூட ஆரம்பிக்கின்றான். உயிரோடு சமாதியாகப் போகின்றோம் என்பதைப் புரிந்து கொண்டு அந்தக் கழுதை பெருங்குரலெடுத்து அலறியது. ஆனால் கிணறை முழுமையாக மூடும் பொழுது அவர்கள் ஆச்சரியப்படும் அளவிற்கு அந்தக் கழுதை கிணற்றை விட்டு வெளியே வந்தது. முதலில் அலறிய கழுதை பின் தன் மேல் விழுந்த மண், செத்தையை உதறி விட்டு அதன் மேல் ஏறி நின்று......... ஏறி நின்று...... அப்படியே மேலே வந்து விட்டது. தொடர் முயற்சியும், நம்பிக்கையுமே அதை மேலே கொண்டு வந்தது எனக் கூறவும் வேண்டுமா?

ஆக நண்பர்களே உங்களை நீங்கள் அறிந்து விட்டீர்களா? உங்கள் திறமையை அறிந்தால் மட்டும் போதாது அது மற்றவர்களிடமிருந்து தனித் தன்மை வாய்ந்ததாகவும் இருக்க வேண்டும். வாருங்கள் மேலே பயணிப்போம்.

**திறமை தனித்துவம் வாய்ந்ததா? USP**

இவ்வுலகில் பிறந்த அனைவருக்குமே ஏதாவது ஒரு திறமையாவது குறைந்த பட்சம் இருக்கிறது. அப்படிப்பட்ட அந்த திறமை அனைவருக்கும் பொதுவாக இருக்கக் கூடியதா? அல்லது அவருக்கு மட்டுமே தனித்துவமானதா? (unique selling proposition).




நடிப்புக்கு ஒரு சிவாஜி கணேசன், ஸ்டைலுக்கு ஒரு ரஜினி காந்த், நடனத்திற்கோர் விஜய், உழைப்பிற்கு என்றும் கமலஹாசன் என்று சினிமா உலகில் இப்படித் தனித்துவமான திறமை படைத்தோருக்கான உதாரணங்கள் பலப் பல. மேலும் பீல்டிங்கிற்கு ஒரு ஜான்டி ரோட்ஸ், பேட்டிங்குக்கு ஒரு டென்டுல்கர், சிறப்பான பந்து வீசலுக்கு ஒரு கிளன் மெக்ராத், அதிரடி ஆட்டத்திற்கு ஒரு தோனி என்று தனித்துவ திறமைக்கு கிரிக்கெட் உலகில் பல உதாரணங்கள். அது மட்டுமா? நாட்டியத்திற்கோர் பத்மா சுப்பிரமணியன், இசைக்கோர் பாலமுரளி கிருஷ்ணா, பட்டிமன்றத் தலைமைக்கோர் பாப்பையா, கருணைக்குத் தெரஸா இப்படி தனித்துவம் வாய்ந்தவர்களைப் பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம்.

உங்கள் திறமை உங்களுக்கு மட்டுமே தனித்துவமாக இருக்கும் பொழுது உலகமே உங்களை ஏறெடுத்துப் பார்க்கும். வெறும் மனிதராக இருக்கும் உங்களை ஒரு பிராண்டாக(Brand) மாற்றக் கூடிய தன்மை அதற்கு உண்டு. ஆனால் இதில் உள்ள ஆபத்தென்னவென்றால் இந்த தனித்துவம் எப்பொழுது மற்றவர்களுக்கும் பொதுவாக மாறி விடுகிறதோ அன்று உலகின் கவனம் உங்களை விட்டு அகன்று விடும். ஆகையால் கருவேப்பிலைக் கொத்து போல ஒரே ஒரு தனித்துவமான திறமையுடன் திருப்திப்பட்டுக் கொண்டு விடாதீர்கள். எனக்கொரு நண்பர் இருக்கின்றார். அவர் விசிட்டிங் கார்டுகள் சகாய விலையில் அச்சடித்துக் கொடுப்பதில் சிறந்து விளங்கினார். தமிழகம் முழுவதிலிருந்தும் அவருக்கு ஆர்டர்கள் குவிந்தன. ஆனால் நாளடைவில் இவர் போல் அச்சடிப்பவர்கள் அந்தந்த ஊர்களிலேயே உருவாக இவர் வேறு தொழிலுக்குத் தள்ளப்பட்டார் என்று நான் கூறவும் வேண்டுமா? மேலும் மேலும் தனித்துவமான திறமைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். உலகம் கவனிக்கும் உன்னத தலைவர்களாக நீங்கள் வாழலாம்.

*தேடிச் சோறு நிதந்தின்று — பல*
*சின்னஞ்சிறு கதைகள் பேசி - மனம்*
*வாடித் துன்பமிக உழன்று — பிறர்*
*வாடப் பல செயல்கள் செய்து — நரை*
*கூடிக் கிழப் பருவம் எய்தி - கொடுங்*
*கூற்றுக் கிரையெனப் பின் மாயும் — பல*
*வேடிக்கை மனிதரைப் போல என்னை நினைத்தாயோ?*



என்று பாரதி கூறியது போல நாம் அனைவரும் விந்தை மனிதர்கள், தனித்துவம் வாய்ந்தவர்கள். மகத்தான நோக்கம் கொண்டவர்கள், பேரார்வத்துடன் செயல்படுபவர்கள், தம்மை அறிந்து சாதனை பல படைக்கப் போகின்றவர்கள், அதற்குத் தேவை ஒரு திட்டம், ஒரு இலக்கு நெறி. அது உங்களை வழி நடத்தும், உங்களது எண்ணங்களை எல்லைகள் பல தாண்டி அப்பால் பயணிக்க வைக்கும். உங்கள் உணர்வு நிலைகள் புதிய பரிமாணங்களில் விரிவடையும். உங்கள் திறன்களும் புடம் போடப்பட்டு நீங்கள் எண்ணிய நிலையை விட, கனவு கண்டதை விட, அனைத்தையும் தாண்டிய ஓர் உன்னத நிலையை நீங்கள் அடைய முடியும்.

அப்படிப்பட்ட இலக்கு நெறி அமைத்தலைப் பற்றி விரிவாக அடுத்த தொடரில் காண்போம்.